## கலாசாரம்-பாரம்பரிய கொண்டாட்டம்:

# சென்டிரல், வடபழனி நிலையங்களில் கலை நிகழ்ச்சி

## மெட்ரோ ரெயில் நிறுவனம் அறிவிப்பு

சென்னை, பிப்.22-

தமிழ் கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தை கொண்டாடுவதின் ஒரு பகுதியாக சென்னை முழுவதும் உள்ள பல்வேறு இசை கலைஞர்கள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து இசை, கலை நிகழ்ச்சிகளை மெட்ரோ ரெயில் நிறுவனம் நடத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், நிமிர்வு கலையகம் அமைப்புடன் இணைந்து கலை நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளது. அதன் விவரம் வருமாறு:-

★ 22-ந்தேதி (இன்று) மாலை 5.30 மணி முதல் இரவு 7.30 மணி வரை சென்டிரல் மெட்ரோ ரெயில் நிலையத்தில் பறையாட்டம் நிகழ்ச்சி.

★ 23-ந்தேதி (நாளை) மாலை 5.30 மணி முதல் இரவு 7.30 மணி வரை வடபழனி மெட்ரோ ரெயில் நிலையத்தில் பறையாட்டம் நிகழ்ச்சி.

மேற்கண்ட தகவல் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டு உள்ளது.